ஸ்ரீ:



ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீ சடகோபாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ ராமானுஜாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா சேவக
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

# நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

# திருக்குருந்தாண்டகம்


## ஸ்ரீ அஹோபில மட தயாரிப்பு

(May 2000)



This version of 4000 Dhivya Prabhandham is prepared by a group of Sri Vaishnavas from Bahrain for Sri Ahobila Muth for easy recitation of the verses. Use of this MS-Word document for commercial purposes is prohibited. For more information contact Sri Venkat at rmvenkat@yahoo.com.

# திருக்குருந்தாண்டகம்

2032:##
நிதியினைப் பவளத் தூணை*நெறிமையால் நினைய வல்லார்,*
கதியினைக் கஞ்சன் மாளக்*கண்டுமுன் அண்டமாளும்,*
மதியினை மாலை வாழ்த்தி*வணங்கியென் மனத்து வந்த,*
விதியினைக் கண்டு கொண்ட*தொண்டனேன் விடுகிலேனே (2) 1

2033:
காற்றினைப் புனலைத் தீயைக்*கடிமதிள் இலங்கை செற்ற-
ஏற்றினை,* இமயம் மேய*எழில்மணித் திரளை,* இன்ப-
ஆற்றினை அமுதம் தன்னை*அவுணன் ஆருயிரை உண்ட-
கூற்றினை,* குணங்கொண்டு உள்ளம்*கூறுநீ கூறுமாறே 2

2034:
பாயிரும் பரவை தன்னுள்*பருவரை திரித்து,* வானோர்க்-
காயிருந்து அமுதம் கொண்ட*அப்பனை எம்பிரானை,*
வேயிருஞ்சோலை சூழ்ந்து*விரிகதிர் இரிய நின்ற,*
மாயிருஞ்சோலை மேய*மைந்தனை வணங்கி னேனே. 3

2035:
கேட்கயான் உற்றதுண்டு * கேழலாய் உலகங்கொண்ட,*
பூக்கெழு வண்ணனாரைப் * போதரக் கனவில் கண்டு,*
வாக்கினால் கருமம் தன்னால் * மனத்தினால் சிரத்தை தன்னால்,*
வேட்கை மீதூர வாங்கி * விழுங்கினேற்கு இனியவாறே. 4

2036:
இரும்பனன்றுண்ட நீர்போல்*எம்பெருமானுக்கு, என்தன்*
அரும்பெறல் அன்புபுக்கிட்டு*அடிமை பூண்டு உய்ந்து போனேன்,*
வரும்புயல் வண்ணனாரை*மருவியென் மனத்து வைத்து,*
கரும்பினின் சாறு போலப்* பருகினேற்கு இனியவாறே 5

2037:
மூவரில் முதல்வனாய*ஒருவனை உலகங் கொண்ட,*
கோவினைக் குடந்தை மேய*குருமணித் திரளை,* இன்பப்-
பாவினைப் பச்சைத் தேனைப்*பைம்பொன்னை அமரர் சென்னிப்-
பூவினை,* புகழும் தொண்டர் * என்சொல்லிப் புகழ்வர் தாமே? 6

2038:
இம்மையை மறுமை தன்னை*எமக்கு வீடாகி நின்ற,*
மெய்ம்மையை விரிந்த சோலை*வியன் திருவரங்கம் மேய,*
செம்மையைக் கருமை தன்னைத் * திருமலை ஒருமையானை,*
தன்மையை நினைவார் என்தன் * தலைமிசை மன்னுவாரே. 7

2039:
வானிடைப் புயலை மாலை * வரையிடைப் பிரசம் ஈன்ற,*
தேனிடைக் கரும்பின் சாற்றைத் * திருவினை மருவி வாழார்,*
மானிடப் பிறவி அந்தோ! * மதிக்கிலர் கொள்க,*தம்தம்*
ஊனிடைக் குரம்பை வாழ்க்கைக்கு *உறுதியே வேண்டினாரே. 8

2040:

உள்ளமோ ஒன்றிநில்லாது * ஓசையில் எரிநின்றுண்ணும்*
கொள்ளிமேல் எறும்பு போலக் * குழையுமால் என்தன் உள்ளம்,*
தெள்ளியீர்! தேவர்க்கு எல்லாம் * தேவராய் உலகம் கொண்ட–
ஒள்ளியீர்,* உம்மை அல்லால் * எழுமையும் துணையிலோமே. 9

2041:
சித்தமும் செவ்வை நில்லாது * என்செய்கேன் தீவினையேன்,*
பத்திமைக்கு அன்புடையேன் ஆவதே* பணியாய் எந்தாய்,*
முத்தொளி மரகதமே! * முழங்கொளி முகில்வண்ணா,*என்–
அத்த! நின் அடிமை அல்லால் * யாதுமொன்று அறிகிலேனே. 10

2042:
தொண்டெல்லாம் பரவி நின்னைத் * தொழுதடி பணியுமாறு–
கண்டு,* தான் கவலை தீர்ப்பான் * ஆவதே பணியா எந்தாய்,*
அண்டமாய் எண்திசைக்கும் * ஆதியாய் நீதியான,*
பண்டமாம் பரம சோதி! * நின்னையே பரவு வேனே. 11

2043:
ஆவியை அரங்க மாலை * அழுக்குடம்பு எச்சில் வாயால்,*
தூய்மையில் தொண்டனேன் நான் * சொல்லினேன் தொல்லை நாமம்*,
பாவியேன் பிழைத்தவாறென்று * அஞ்சினேற்கு அஞ்சலென்று*
காவிபோல் வண்ணர் வந்து* என் கண்ணுளே தோன்றினாரே 12

2044:
இரும்பனன்றுண்ட நீரும் * போதரும் கொள்க,* என்தன்–
அரும்பிணி பாவம் எல்லாம் * அகன்றன என்னை விட்டு,*
சுரும்பமர் சோலை சூழ்ந்த * அரங்கமா கோயில் கொண்ட,*
கரும்பினைக் கண்டு கொண்டு* என் கண்ணிணை களிக்குமாறே 13

2045:
காவியை வென்ற கண்ணார் * கலவியே கருதி,* நாளும்–
பாவியேனாக எண்ணி * அதனுள்ளே பழுத்து ஒழிந்தேன்,*
தூவிசேர் அன்னம் மன்னும் * சூழ்புனல் குடந்தையானை,*
பாவியேன் பாவியாது * பாவியேன் ஆயினேனே! 14

2046:
முன்பொலா இராவணன்தன் * முதுமதிள் இலங்கை வேவித்து,*
அன்பினால் அனுமன் வந்து* ஆங்கடியிணை பணிய நின்றார்க்கு,*
என்பெலாம் உருகியுக்கிட்டு* என்னுடை நெஞ்ச மென்னும்,*
அன்பினால் ஞான நீர்கொண்டு* ஆட்டுவன் அடியனேனே. 15

2047:
மாயமான் மாயச் செற்று * மருதிற நடந்து,* வையம்–
தாயமா பரவை பொங்கத் * தடவரை திரித்து, வானோர்க்கு*
ஈயுமால் எம்பிரானார்க்கு * என்னுடைச் சொற்கள் என்னும்,*
தூய மாமாலை கொண்டு * சூட்டுவன் தொண்டனேனே 16

2048:
பேசினார் பிறவி நீத்தார் * பேருளான் பெருமை பேசி,*
ஏசினார் உய்ந்து போனார் * என்பது இவ்வுலகின் வண்ணம்,*
பேசினேன் ஏச மாட்டேன் * பேதையேன் பிறவி நீத்தற்கு,*
ஆசையோ பெரிது கொள்க * அலைகடல் வண்ணர் பாலே 17

2049:
இளைப்பினை இயக்கம் நீக்கி * இருந்துமுன் இமையைக் கூட்டி,*
அளப்பில் ஐம்புலனடக்கி * அன்பவர் கண்ணே வைத்து,*
துளக்கமில் சிந்தை செய்து * தோன்றலும் சுடர்விட்டு,* ஆங்கே-
விளக்கினை விதியின் காண்பார் * மெய்ம்மையே காண்கிற் பாரே 18

2050:##
பிண்டியார் மண்டை ஏந்திப் * பிறர்மனை திரிதந்துண்ணும்,-
உண்டியான்* சாபம் தீர்த்த ஒருவனூர்,* உலக மேத்தும்*
கண்டியூர் அரங்கம் மெய்யம் * கச்சிபேர் மல்லை என்று-
மண்டினார்,* உய்யல் அல்லால் * மற்றையார்க்கு உய்யலாமே? (2) 19

2051:##
வானவர் தங்கள் கோனும் * மலர்மிசை அயனும்,*நாளும்-
தேமலர் தூவி ஏத்தும் * சேவடிச் செங்கண் மாலை,*
மானவேல் கலியன் சொன்ன * வண்தமிழ் மாலை நாலைந்தும்,*
ஊனமதின்றி வல்லார் * ஒளிவிசும்பு ஆள்வர் தாமே (2) 20

திருமங்கைஆழ்வார் திருவடிகளே சரணம்

---